**மே – 30**

# TNPSC துளிகள்

- ❖ பெங்களூரைச் சேர்ந்த கார் பந்தய வீரர் குஷ் மைனி, மொனாக்கோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் ஃபார்முலா 2 வெற்றியைப் பெற்று ஒரு வரலாற்றைப் படைத்துள்ளார்.
- ❖ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆனது, 24 மணி நேரத்தில் அதிகமான ஆயுள் காப்பீடுகளை (588,107) விற்றதற்காக கின்னஸ் உலகச் சாதனைப் பட்டத்தைப் பெற்று உள்ளது.
- ❖ இரயில் பாதைகளை 100% மின்மயமாக்கும் ஒரு நிலையை அடைந்த 24வது மாநிலம் / ஒன்றியப் பிரதேசமாக குஜராத் மாறியுள்ளது.
- ❖ புது டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் அமைப்பின் பத்தாவது நிர்வாகக் குழுக் கூட்டத்திற்குப் பிரதமர் தலைமை தாங்கினார்.
- ❖ கிரீன்கோ, அதானி கிரீன் மற்றும் JSW எனர்ஜி ஆகியவற்றின் உதவியுடன் 2032 ஆம் ஆண்டிற்குள் சுமார் 51.24 GW திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின்னாற்றல் திறனை உருவாக்குவதற்கு என இந்தியா திட்டமிட்டுள்ளதாக மத்திய மின்சார ஆணையம் (CEA) தெரிவித்துள்ளது.
- ❖ 9வது பிரிக்ஸ் தொழில் துறை அமைச்சர்கள் கூட்டம் ஆனது பிரேசிலின் பிரேசிலியா நகரில் "Strengthening Global South Cooperation for More Inclusive and Sustainable Governance" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- ❖ 2025 ஆம் ஆண்டு உலக ஹைட்ரஜன் உச்சி மாநாடு ஆனது நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடைபெற்றது.
- ❖ இந்தியாவானது பிரான்ஸ் மற்றும் கோஸ்டாரிகாவுடன் இணைந்து “Blue Talks” எனப் படும் இரண்டாவது கடல் சார் பேச்சுவார்த்தையை புது டெல்லியில் நடத்தியது.
- ❖ மூன்றாவது ஐக்கிய நாடுகளின் பெருங்கடல் மாநாடு (UNOC3) ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரான்சின் நைஸ் எனுமிடத்தில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## K. உமாதேவி மற்றும் தமிழக அரசு இடையிலான வழக்கு


- ❖ மகப்பேறு கால விடுப்பு என்பது ஒரு பெண்ணின் பேறுகால உரிமைகளின் ஒரு அங்கம் ஆகும் என்பதோடு அது மகப்பேறு காலத்தின் நலத் திட்டங்களில் / பலன்களில் ஒருங்கிணைந்ததாகும் என்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்துள்ளது.
- ❖ முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே மகப்பேறு காலச் சலுகைகளை வழங்கும் 101(a) என்ற தமிழ்நாடு மாநில அரசுப் பணிகளின் அடிப்படை விதியின் படி அவருக்கு மகப்பேறுச் சலுகைகள் மறுக்கப்பட்டன.
- ❖ அரசியலமைப்பின் 21வது சரத்து ஆனது, மகப்பேறு சார்ந்த தன்னியக்க உரிமையை உள்ளடக்கியது என்றும், மகப்பேறு கால விடுப்பு இந்த உரிமையின் ஓர் அம்சம் என்றும் நீதிமன்றம் கூறியது.
- ❖ 42வது சரத்தானது, நியாயமான மற்றும் மனிதாபிமான வேலை சூழ்நிலைகள் மற்றும் மகப்பேறு கால நிவாரணத்தை வழங்குகிறது, மேலும் 51(c)வது சரத்தானது சர்வதேசச் சட்டம் மற்றும் ஒப்பந்தக் கடமைகளுக்கு இணங்குமாறு அரசின் மீது கடமையினை நிர்ணயிக்கிறது.
- ❖ இந்தியாவில் மகப்பேறு கால விடுப்பு கொள்கையானது 2017 ஆம் ஆண்டில் திருத்தப்

பட்ட 1961 ஆம் ஆண்டின் மகப்பேறுச் சலுகைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப் பட்டு உள்ளது.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் கடற்கரை நீளம்




- இந்தியாவின் கடற்கரையானது 7,516.6 கிலோ மீட்டரிலிருந்து சுமார் 11,098.8 கி. மீட்டர் ஆக அதிகரித்துள்ளதோடு அந்த நீளமானது தற்போது உள்துறை அமைச்சகத்தால் மறு மதிப்பாய்வு செய்யப் பட்டு வருகிறது.
- 7,516.6 கி.மீ. என்ற நீளமானது முதன்முதலில் 1970 ஆம் ஆண்டுகளில் அந்த நேரத்தில் கிடைக்கப் பெற்ற அளவீட்டு நுட்பங்களின் அடிப்படையில் பதிவு செய்யப் பட்டது.
- இந்தியாவில் 11 கடலோர மாநிலங்கள் மற்றும் இரண்டு பெரிய தீவுக் குழுக்கள் உள்ளன.

- 1961 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்தில் இணைந்த கடைசியான கடலோர மாநிலம் கோவா ஆகும் என்ற நிலையில் அதன் பிறகு இணைந்த ஒரே மாநிலம் என்பது 1975 ஆம் ஆண்டில் சிக்கிம் (நிலத்தால் சூழப்பட்டது) ஆகும்.
- 1970 ஆம் ஆண்டுகளின் முந்தைய மதிப்பீடு இந்தியாவின் கடற்கரையை 1:4,500,000 தெளிவுத் திறனில் காட்டிய வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டது.
- தேசிய நீரியல் வரைவு அலுவலகம் (NHO) மற்றும் இந்தியக் கணக்கெடுப்பு ஆகியவை மூலம் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- இது 1:250,000 என்ற துல்லிய அளவில் மின்னணு வழிசெலுத்தல் விளக்கப் படங்களைப் பயன்படுத்தியது.

## அனைத்து CAPF பிரிவுகளிலும் பணி நிலைப் பிரிவு மதிப்பாய்வு





- உச்ச நீதிமன்றம் ஆனது இந்தியத் திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP), எல்லைக் காவல் படை (BSF), மத்திய சேமக் காவல் படை (CRPF), மத்தியத் தொழிற்துறைப் படை (CISF) மற்றும் சஷாஸ்த்ர சீமா பால் (SSB) உள்ளிட்ட அனைத்து மத்திய ஆயுதக் காவல் படைகளிலும் (CAPF) பணிநிலைப் பிரிவு மதிப்பாய்வை ஆறு மாதங்களுக்குள் நடத்த உத்தரவிட்டுள்ளது.
- இந்த மதிப்பாய்வு ஆனது முதலில் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட திட்டமிடப் பட்டது, ஆனால் தாமதமானது.
- CAPF படைகளில் தலைமை ஆய்வாளர் பதவி வரையிலான இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரிகளின் பணியமர்த்தலை இரண்டு ஆண்டுகளில் "படிப்படியாகக் குறைக்க" வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது இதனால் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.
- பணிநிலைப் பிரிவு சார்ந்தப் பிரச்சினைகள் மற்றும் பிற தொடர்புடைய அனைத்து விவகாரங்களுக்கும் CAPF படையானது ஒழுங்கமைக்கப்பட்ட A வகுப்பு பணிகளாகக் (OGAS) கருதப்படுகின்றன.
- தற்போது, இந்தப் படைகளில் IG நிலையில் 50% பதவிகள் IPS அதிகாரிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.
- துணைத் தலைமை ஆய்வாளர் (DIG) பதவிகளில் இராணுவத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர (5%), சுமார் 15 சதவீதம் ஆனது அகில இந்தியப் பணியிலிருந்து பணியமர்த்தப் பட்ட அதிகாரிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

## வாக்காளர்களுக்கான கைபேசி ஒப்படைப்பு வசதி

- தேர்தல் ஆணையம் வாக்குச் சாவடிகளுக்கு வெளியே வாக்காளர்கள் தங்களது

கைபேசிகளை ஒப்படைப்பதற்கும், பிரச்சாரம் செய்வதற்கான விதிமுறைகளை மறு ஆய்வு செய்வதற்கும் மேலும் இரண்டு விரிவான வழிமுறைகளை வெளியிட்டுள்ளது.

- இந்த வழிமுறைகள் ஆனது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 மற்றும் தேர்தல் நடத்தை விதிகள், 1961 ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு தேர்தல் விதிகளுக்கு இணங்கும் வகையில் உள்ளன.
- ஒரு வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர் தொலைவில் மட்டுமே கைபேசிகள் அதுவும் அனைத்து இணைப்புகளும் துண்டிக்கப்பட்ட /அணைக்கப் பட்ட நிலையில் மட்டுமே அனுமதிக்கப் படும்.
- வாக்குச் சாவடிக்குள் வாக்களிப்பு குறித்த இரகசியத்தை உறுதி செய்யும் 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 49Mவது விதி என்பது தொடர்ந்து கண்டிப்பாக அமல்படுத்தப் படும்.





# பொருளாதாரச் செய்திகள்

## பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியம்

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI), ஆறு உறுப்பினர்களைக் கொண்ட புதிய பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியம் (PRB) அமைப்பது குறித்து மிக அதிகாரப்பூர்வமாக அறிவித்து உள்ளது.
- இது நாட்டில் பண வழங்கீட்டு / கட்டண முறைகளை ஒழுங்குபடுத்துவதையும் மேற் பார்வையிடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தற்போதுள்ள பண வழங்கீட்டு மற்றும் தீர்வு முறைகளின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை வாரியத்திற்கு (BPSS) மாற்றாக அமைய உள்ளது.
- புதிய PRB ஆனது, RBI ஆளுநரின் தலைமையில் செயல்படும் என்பதோடு மேலும் இதில் முதல் முறையாக, மத்திய அரசிலிருந்து மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.
- ஆளுநர், துணை ஆளுநர் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட RBI அதிகாரி ஆகியோர் பதவி வழி உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள்.
- மற்ற உறுப்பினர்கள்

- பண வழங்கீட்டு மற்றும் தீர்வு முறைகளுக்குப் பொறுப்பான துணை ஆளுநர்,
- மத்திய வாரியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு RBI அதிகாரி மற்றும்
- அரசினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.




## 2025 ஆம் ஆண்டிற்கான தங்கக் கடன்களுக்கான புதிய RBI விதிமுறைகள்





❖ வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs) மூலம் தங்கக் கடன்களை வழங்கச் செய்வதற்கான பல நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்காகவும் மற்றும் தரப்படுத்துவதற்காகவும் வேண்டி இந்திய ரிசர்வ் வங்கி வரைவு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

- இந்த வரைவு ஆனது, ஒரு பொருளின் மதிப்பிற்கும் கடனுக்கும் உள்ள விகிதத்தினை அனைத்து தங்கக் கடன்களுக்கும், தற்போதுள்ள 80 சதவீதத்திலிருந்து 75% என்ற ஒரு வரம்புக்குள் கொண்டு வருகிறது.
- கொள்முதல் ரசீதுகள் கிடைக்கவில்லை என்றால் கடன் வாங்குபவர்கள் உரிமைச் சான்று அல்லது அறிவிப்பை வழங்க வேண்டும்.
- இதில் கடன் வழங்குபவர்கள் தங்கத்தின் தூய்மை, எடை, கழித்தல்கள், படம் மற்றும் மதிப்பை விவரிக்கும் சான்றிதழை வழங்க வேண்டும்.
- 22 காரட் அல்லது அதற்கு மேற்பட்டத் தூய்மையுடன் கூடிய தங்க நகைகள், தங்க ஆபரணங்கள் மற்றும் வங்கியில் விற்கப்படும் நாணயங்கள் மீது மட்டுமே கடன்கள் அனுமதிக்கப்படும்.
- குறைந்தபட்சம் 925 தூய்மையுடன் கூடிய வெள்ளி நகைகள், ஆபரணங்கள் மற்றும் வங்கியில் விற்கப்படும் வெள்ளி நாணயங்கள் மீது மட்டுமே கடன்கள் பெறலாம்.
- இந்த வரைவு ஆனது ஒரு கடனாளிக்கு 1 கிலோ தங்க நகைகள் மற்றும் 50 கிராம் தங்க நாணயங்கள் என்ற வரம்பை முன்மொழிகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் வெப்பமண்டல மழைக்காடுகள் இழப்பு




- 2024 ஆம் ஆண்டில் உலகம் சுமார் 25,870 சதுர மைல்கள் (67,000 சதுர கிலோமீட்டர்) அளவிலான பிரதான மழைக்காடுகளை இழந்தது.
- இது 2023 ஆம் ஆண்டில் இழந்த அளவை விட சுமார் இரு மடங்கு அதிகமாகும்.
- கடந்த ஆண்டு, முதன்முறையாக, தீ விபத்துகள் ஆனது காடுகள் இழப்புக்கு மிகப் பெரிய காரணமாக இருந்தன.
- காடுகள் இழப்பிற்கான இரண்டாவது பெரிய காரணம் பயிர்களை வளர்ப்பது மற்றும் விலங்குகளை வளர்ப்பது உள்ளிட்ட வேளாண் பயன்பாட்டிற்காக வேண்டி நிலத்தை அழிப்பதாகும்.
- வேளாண்மைக்காக அழிக்கப் பட்ட நிலத்தின் அளவு கடந்த ஆண்டு 14% அதிகரித்து உள்ளது.

- இது 10 ஆண்டுகளில் மிகப்பெரிய அதிகரிப்பு ஆகும்.
- உலகின் மொத்தப் பிரதான காடுகளின் இழப்பில் 42% பிரேசிலில் பதிவாகி இருந்தது என்ற நிலையில் இதில் இரண்டாம் இடத்தில் பொலிவியா உள்ளது.

## கலிபேயா சினுஃபர்காட்டா

- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த கலிபேயா சினுஃபர்காட்டா என்ற புதிய வகை தும்பி/ஊசித் தட்டான்களை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த ஒரு இனமானது "ரோமம் கொண்ட வெண்கல முதுகுத் தும்பி" என்று பொதுவாக அழைக்கப் படுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது கலிஃபியா இனத்தினைக் குறிக்கிறது.
- கலிஃபியா கன்ஃபியூஸ் என்ற மற்ற இனம் சுமார் 165 ஆண்டுகளுக்கு முன்பு விவரிக்கப் பட்டது.




## காகபோ மீட்பு





- மிக ஆபத்தான நிலையில் உள்ள காகபோ/ஆந்தைக் கிளியினை இனப்பெருக்கம் செய்ய உதவும் வகையில் ஆராய்ச்சியாளர்கள் செயற்கை கருவூட்டல் (AI) முறையை

வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளனர்.

- ❖ காகபோ ஆனது உலகின் மிகப்பெரிய பறக்க இயலாத கிளியாகும் என்பதோடு இது நியூசிலாந்து நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டது.
- ❖ இரவு நேரத்தில் வாழும் இந்தத் தாவரம் உண்ணும் கிளியானது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிக அருகி வரும் இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- ❖ ரிமு பெர்ரி போன்ற சில பூர்வீகப் பழ வகைகள் ஏராளமாக விளையும் ஆண்டுகளில் மட்டுமே இனப்பெருக்கம் செய்கிறது என்பதால் காகபோ என்பது அரிதாகவே இனப் பெருக்கம் செய்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இந்தியாவின் அறிவியல் அருங்காட்சியக இயக்கத்தின் தந்தை




- ❖ தேசிய அறிவியல் அருங்காட்சியகச் சபையின் (NCSM) தலைமை ஸ்தாபன இயக்குநர் சரோஜ் கோஸ் காலமானார்.
- ❖ கோஷ் 1979 முதல் 1997 ஆம் ஆண்டு வரை NCSM சபையின் தலைமை இயக்குநராகப் பணியாற்றினார்.
- ❖ இந்தியாவின் அறிவியல் மையங்கள் மற்றும் இந்திய அருங்காட்சியகங்களின் வலை அமைப்பின் சிற்பியாக அவர் நினைவு கூரப்படுகிறார்.
- ❖ கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்ட NCSM ஆனது, 1978 ஆம் ஆண்டில் மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி சங்கமாக உருவாக்கப்பட்டது.
- ❖ இது தேசிய அளவிலான ஏழு மையங்கள் உட்பட வடக்கு, தெற்கு, கிழக்கு, வடகிழக்கு மற்றும் மேற்கு மண்டலங்களில் சுமார் 26 அறிவியல் மையங்கள் மற்றும் இன்ன பிற அருங்காட்சியகங்களை நிர்வகிக்கிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2025

- ❖ தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகியவை முதலாவது கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை நடத்தின.


- பதக்கம் அல்லாத செயல் விளக்கம் சார்ந்த விளையாட்டுகளாக கயிறு இழுத்தல் மற்றும் மல்லர் கம்பம் போட்டிகள் நடத்தப் பட்டன.
- கேலோ இந்தியா போட்டிகளின் கீழ் நடத்தப்பட்ட முதல் கடற்கரை விளையாட்டு இது ஆகும்.
- இப்பதக்க எண்ணிக்கையில் மணிப்பூர் முதலிடத்திலும், மகாராஷ்டிரா இரண்டாவது இடத்திலும், நாகாலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.


**KHELO INDIA BEACH GAMES 2025 MEDAL TALLY**

| Rank | State | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Manipur | 5 | 6 | 3 | 14 |
| 2 | Maharashtra | 5 | 5 | 10 | 20 |
| 3 | Nagaland | 5 | 3 | 5 | 13 |
| 4 | Haryana | 5 | 1 | 3 | 9 |
| 4 | Jammu and Kashmir | 5 | 1 | 3 | 9 |
| 6 | Delhi | 4 | 2 | 4 | 10 |
| 7 | Dadra and Nagar Haveli and Daman and Diu | 4 | 0 | 5 | 9 |
| 8 | Tamil Nadu | 2 | 2 | 3 | 7 |
| 9 | Madhya Pradesh | 2 | 2 | 2 | 6 |
| 10 | Kerala | 2 | 0 | 3 | 5 |

# இதரச் செய்திகள்

## NLCIL நிறுவனத்தின் 69 ஆம் ஆண்டு விழா




- இந்திய நெய்வேலி பழுப்பு நிலக்கரி உற்பத்திக் கழக லிமிடெட் (NLCIL) நிறுவனமானது அதன் 69வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- ஆற்றல் மற்றும் முன்னேற்றத்தைக் குறிக்கும் NLCIL நிறுவனத்தின் நிறுவனத் தூதராக நியோன் என்ற சிங்க உருவம் கொண்ட புதிய உருவச் சின்னம் வெளியிடப்பட்டது.

- நெறிமுறைகள் மற்றும் நேர்மையை ஒரு அடிப்படையாகக் கொண்ட முடிவுகளை மேற்கொள்ள ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் 'The Guiding Light – NLCIL Ethics Book' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★